# PROCEEDINGS

## International Conference on Contemporary Management (ICCM) - 2014

### "Empowering People Towards Sustainable Development"

Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka
14th & 15th, March 2014

**International Conference on Contemporary Management (ICCM) - 2014**

© 2014 Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka.

URL : www.jfn.ac.lk / macos / ICCM - 2014

e-mail : iccmuj@gmail.com

T.P : 0094 (0)21 222 3610

Printers : Harikanan Printers,
#681, K.K.S Road, Jaffna, Sri Lanka.

**ISSN:** 2362-0536

**Disclaimer :**

Responsibilities for the content of the full papers included in the publication remain with these respective authors.

# யாழ்ப்பாணத்தில் வீரசைவப் பண்பாட்டு மரபுகள் : வீராகமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு.

சி. ரமணராஜா


## ஆய்வுச்சுருக்கம்

சமயப் பண்பாடு என்பது சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் கருவியாகவே இருந்து வருகின்றது. அனைத்துச் சமயங்களும் தோன்றிய காலம் தொட்டு சமூகக் கட்டுப்பாட்டினை நிர்வகித்துவருகின்றன. இச்சமய சமூக நிறுவனங்களுள் வீரசைவமும் ஒன்றாக விளங்குகின்றது. சமய மற்றும் சமுதாய நிலையில் சமுதாயப் புரட்சியோடும். கிளர்ச்சியோடும் உருவாக்கம் பெற்ற சமயங்களின் வரிசையில் வீரசைவம் முதன்மையும் முக்கியத்துவமும் பெறுகின்றது. பன்னிரெண்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த பசவர் என்பவரின் சமூக சீர்திருத்த நோக்கோடு இச்சமய சிந்தனை விரிவடைந்து பல பிரதேசங்களுக்கும் பரவலடைந்து மேல் நிலை பெற்று விளங்குகின்றது. இந்த வகையில் இச்சமயத்தின் செல்வாக்கினையும் தாக்கத்தினையும் இலங்கையிலும் உணர முடிகின்றது. தனித்துவமான சமய சமூக பண்பாட்டுப் பேணலுடைய யாழ்ப்பாணத்து பண்பாட்டுச் சூழலில் வீரசைவம் எனும் சைவப் பிரிவும் சிறப்புற்று விளங்குவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.


**திறவுச்சொற்கள் :** வீரசைவம், சமயம், சமூகக்கட்டுப்பாடு

### ஆய்வின் நோக்கமும் முறையியலும்

வீரசைவர்கள் தமது சமய அனுட்டானங்களுக்கும், அடிப்படை நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கும், சமயம் சார்ந்த போதனைகளுக்கும், பிரசாரத்திற்கும் நூல்கள் பலவற்றை பிரமாணங்களாக பயன்படுத்துகின்றனர். அவற்றில் ஒன்றாக "வீராகமம்" உள்ளது. தமிழில் அமைந்துள்ள வீராகமத்தின் செல்வாக்கினை யாழ்ப்பாணத்து வீரசைவர்களின் வாழ்வியலில் காணமுடிகின்றது. சமய அனுட்டான முறைமைகளினூடாக வீராகம மரபின் நீட்சியை கண்டுணர முடிகின்றது. இவ்வகையில் யாழ்ப்பாணத்து வீரசைவர்களின் வாழ்வியல் அம்சங்கள் வீராகமத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது என்பதனை இனங்கண்டு வெளிக்கொணர்வது இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

இவ்வாய்வானது யாழ்ப்பாணப் பிரதேசத்தையும், யாழ்ப்பாணத்து வீரசைவர்கள் தமது வாழ்வியலில் கடைப்பிடித்து ஒழுகுகின்ற சமயப்பண்பாட்டு அம்சங்களையும் எல்லையாகக் கொண்டமைந்துள்ளது. வீராகமம் என்பது இவ்வாய்வின் மூலம் ஆகும். இவ்வாய்வானது விபரண ஆய்வு முறைமை, வரலாற்றியல் ஆய்வு முறைமை. பகுப்பாய்வு முறைமை, மற்றும் கள ஆய்வு. நேர்காணல்கள் போன்ற ஆய்வு முறைமைகளின் மூலம் முன்னெடுக்கப் படுகின்றது.

### வீரசைவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

சைவம் சிவனுடன் சம்பந்தமாகும் நெறியாகும்.1 மிகவும் நீண்டதொரு வரலாற்றினைச் சைவசமயம் கொண்டு விளங்குகின்றது. ஏறக்குறைய ஐயாயிரமாண்டுகள் பழமையுடைய சைவசமயம் காலத்துக்குக்காலம் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களினூடாக வளம்பெற்று இன்றுவரை நிலையானதொரு இடத்தினைப் பெற்றுத்திகழ்கின்றது. இத்தகைய சமயப் பரப்பிலே பல வகையான அகப்பிரிவுகள் காணப்பட்ட பொழுதிலும் சித்தாந்த சைவம்,காஸ்மீரசைவம், வீரசைவம் என்கின்றமுப்பெரும் பிரிவுகள் முதன்மை

விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பெற்றுத் திகழ்கின்றன. சைவம் நிலைபெற வேண்டும் என்கின்ற பேரவாவின் காரணமாக ஒரு சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டஒரு மறுமலர்ச்சியே வீரசைவம் என்னும் தனிப் பெருஞ்சைவமாகும். இச்சமயப் பிரிவானது ஒன்றினது பிரிவாக அமைந்த பொழுதிலும் அது தனக்கெனத் தனியான தத்துவங் களையும், சமூகக் கோட்பாடுகளையும், தனித்துவமான வழிபாட்டு முறைகளையும் தன்னுள்ளே கொண்டுள்ளது. அத்துடன் வீரசைவமானது ஆகம நெறியினைத் தழுவி நின்ற பொழுதிலும் வேதத்தினையும் அதனை ஒட்டிய வழிபாட்டு முறைமைகளையும் அடியோடு தவிர்த்து வந்திருந்தது.

வீரசைவம் தோன்றிய காலத்தினை இதுவெனத் திட்டவட்டமாகக் கூறிவிட முடியாதுள்ளது. திருமூலர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் வீரசைவம் நிலைபெற்றிருந்ததென்பர். இது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு களுள்ளன. இருப்பினும் பசவண்ணரே[2] இச்சமய நெறியினைத் தோற்றுவித்தவர் என்றும் அவருக்கு முன்னரே பஞ்சாசாரி யர்களால்[3] இந்நெறி தோற்றுவிக்கப்பட்ட தென்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன. தவிர,"வ்ளிட்" என்பவர்,ஏகாந்த ராமையா என்னும் முனிவரே லிங்க மதத்தை ஏற்படுத்தினார் என்று கூறுகின்றார்.[4] வ்ளிட்டின் கருத்தினை வலுச்சேர்ப்பதாக அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். கருத்துக்கள் எவ்வாறு அமைந்திருப்பினும் இவ்வீரசைவம்கி.பி. 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கர்நாடக மாநிலத்தில் பீஜாப்பூர் பிரதேசத்தில் வாழ்ந்த பசவண்ணர் என்பவரினால்மறுமலர்ச்சிக்கு உட்படுத்தப் பட்டது.5 என்பது ஆய்வாளர்களின் முடிவாக உள்ளது.

வீரசைவம் பரம்பலடைவதற்கு அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளே செல்வாக்குச் செலுத்தியிருந்தன. விஜய நகர மன்னர்களின் எழுச்சியோடு வீரசைவம் உத்வேகமடைந்தது. ஏனெனில் இஸ்லாம் சமயத்தினர் இந்து சமயக் கோட் பாடுகளை கண்டித்துச் செயற்பட்டதுடன் சமரசத் தன்மையையும் வலியுறுத்தி வந்தனர். இதனால் இந்துக்கள் பலர் இஸ்லாம் சமயத் தில் உள்ளீர்க்கப்பட்டார்கள். வீரசைவர்கள் இதனை தடுத்து நிறுத்த முற்பட்டனர். இதனால் விஜய நகர மன்னர்களின் பேராதரவு இச்சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. ஆதலால் கர்நாடகத்தில் தோன்றி வளர்ச்சி அடைந்த வீரசைவமானது ஆந்திரம்,தமிழகம், மற்றும் இலங்கை போன்ற பகுதிகளிலும் பரவலடையலாயிற்று.

## இலங்கையில் வீரசைவ மரபுகளும் குடியேற்றங் களும்

பசவண்ணரின் செயற்றிறன்மிக்க சிந்தனைகளைத் தொடர்ந்து இந்தியா எங்கும் வீரசைவ மறுமலர்ச்சிக் கொள்கைகள் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. அந்நிலையில் இலங்கை வரலாற்றில் ஏற்கனவே முதலாம் விஜயபாகு மன்னனோடு திருமண உறவினால் தொடர்புபட்டிருந்த கலிங்க தேசத்து உறவுகள் அரசியலிலும் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தனர்.[6] இவ்வகையில் கலிங்கமாகன் பன்னிரெண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பகுதி யில் இலங்கைக்கு வந்து ஆட்சி புரிந்தான் என்பதும் கொள்ளத்தக்கது.[7] வர்ணாச்சிரம தர்மங்களையும், மரபுவழிச் சிந்தனைகளையும் விலக்கி சைவம் வீரசைவமாக வளர்ச்சி பெற்ற சிந்தனையில் மாகனும் அவனுடைய படை வீரர்களும் செல்வாக்குப் பெற்றனர் என்பதும் தெளிவாகின்றது. இலங்கையில் தீவிர மடைந்த கலிங்கமாகனது சிந்தனையால் வீரசைவம் ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்த தெனக் கூறின் மிகையாகாது,

இத்தகைய சிந்தனையில் மாகனின் இலங்கை ஆட்சிக்கு எதிரான படையெடுப் பானது வீரசைவம் இலங்கையில் பரவுவதற்கு அடிப்படைச் சாத்தியத்தினைத் தோற்று வித்தது.8ஈழத்துப் பாளி நூல்களையும் மட்டக்களப்பு மான்மியம் போன்ற தமிழ் நூல்களையும் ஆராயும் போது ஈழத்தில் மாகனாட்சிக் காலத்தில் வீரசைவம் சிறப்புற்றி ருந்ததென்பது தெரிகிறது.[9]

ஈழத்தில் வீரசைவ மரபின் வளர்ச்சி, சிறப்புப் பெற்ற காரணங்கள் பற்றி இலக்கிய

சான்றாதாரங்களை நோக்குமிடத்து மட்டக் களப்பு பூர்வ சரிதம், மட்டக்களப்பு மான் மியம், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ் வரர் பத்ததி, ஆகியன மாகனை முதனிலைப் படுத்தி வீரசைவம் நிலை பெற்றமையினைக் கூறுகின்றன. இத்தகைய சிந்தனைகள் மூலம் 12ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் இலங்கை யில் மத்திய மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் வீரசைவம் ஸ்திரமான நிலையில் பரவின என்பதை அறிய முடிகின்றது.

**யாழ்ப்பாணத்தில் வீரசைவம்**

யாழ்ப்பாணம் தொன்று தொட்டு சைவம், தமிழ் ஆகிய பண்பாட்டை பேணி வருகின்றது. சைவசமயப் பண்பாடுகள், சைவ வாழ்வு என்பன சைவர்களை சைவர்களாக வழவைத்த பெருமைக்குரியது. சைவ சமயத்த வர்கள் சைவத்தினையும், தமிழையும் நன்கு வளர்த்து வந்தனர். இவ்வாறு தனித்துவமான சமய, சமூகப் பண்பாட்டுப் பேணலுடைய யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுச்சூழலில் வீரசைவம் எனும் சைவப் பிரிவும் சிறப்புற்று விளங்குவதுகுறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பொலநறுவைக் காலத்தில் எவ்வாறு வீரசைவம் பரவியதோ அவ்வாறே யாழ்ப் பாண இராச்சியத்தின் செல்வாக்கு உயர்ந்தி ருந்த காலத்தில் வீரசைவம் பரவியுள்ளதெனக் கருதமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி செய்த காலம் விஜய நகர அரசின் செல்வாக்குக்காணப்பட்ட காலமாகும். சமய மறுமலர்ச்சிக் காலமாக விளங்கிய விஜயநகரப் பேரரசுக் காலத்தில் வீரசைவம் செல்வாக்குப் பெற்று விளங்கியது. இப்பேரரசுக் காலத்தில் வீரசைவர்கள் பெருமளவில் இலங்கைக்கு குறிப்பாக யாழ்ப்பாணம் வந்தனர். விஜய நகர - யாழ்ப்பாண மன்னர்களின் தொடர்புகள் வீரசைவம் வடபகுதியில் மேன்மை கொள்ள வழிவகுத்தது. அத்துடன் வட இந்தியாவில் இருந்துமுஸ்லீம்களால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக் களால் தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகம் போன்ற பகுதிகளில் இருந்து "பண்டாரம்" என அழைக்கப்பட்ட இவ் வீரசைவர்கள் ஈழம் நோக்கி வந்தனர். சிங்கள அரசசபையிலும் ஆதரவுபெற்று இவர்கள் காணப்பட்டதை நோக்கும் போது இக்காலத்தில் வடபகுதியிலும் இது செல்வாக்குப் பெறத் தொடங்கியதென யூகிக்கலாம்.[10]

யாழ்ப்பாணத்து வீரசைவர்கள் இன்று கோட்பாடொன்றினைப் பின்பற்றி வருகின்ற னரெனக் கூறுவதிலும் பார்க்க ஒரு குலத்தவர் என்ற கருத்து வளர்ந்து வலுப்பெற்றுவிட்ட தன்மையில் வாழ்ந்து வருவதனை அறிந்துணர முடிகின்றது. பிரமாண இலக்கியங்கள், பசவண்ணரின் சீர்திருத்தச் சிந்தனைகள் மூலமாக விளக்கப்பட்டுள்ள கோட்பாடுகளை தீவிரமாக பின்பற்றாது சமூக இசைவாக்கத்து டன் தம்மை இணைத்துக் கொண்ட ஓர் குழுவினராகவே யாழ்ப்பாணத்து வீரசைவர் விளங்கக் காணலாம்.

யாழ்ப்பாணத்து வீரசைவர் சமூகத தில் பிராமணர்களுக்கு அடுத்தபடியான மதிப்பைப் பெற்றிருந்தனர். இவர்கள் பொதுவாக "ஐயா", "குருக்கள்" என்று அழைக்கப்பட்டனர். ஆசார்ய அபிஷேகம் பெற்றவர்களே குருக்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தனர். இவர்கள் சமயச் சார்பான கிரியைகளை முன்னின்று நடத்துபவர்களாக உள்ளனர்.

வீரசைவத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் செறிந்து வாழ்கின்றனர். அளவெட்டி, கீரிமலை, இணுவில், வண்ணார்பண்ணை, பண்ணாகம், உரும்பிராய், பண்டத்தரிப்பு, ஏழாலை. சரசாலை, வட்டுக்கோட்டை, கோண்டாவில், மயிலிடடி, மறவன்புலவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் வாழ்கின்ற னர். தையிட்டி, மயிலிட்டி, கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் வசித்த இம்மரபினர் யுத்த சூழ்நிலை காரணமாக பல்வேறு இடங்களில் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

**வீரசைவத்தின் மூல நூல்கள்**

வீரசைவர்கள் தங்களது சமய அனுட்டான விதிமுறைமைகளுக்கும், அடிப் படைக் கோட்பாடுகளைப் பின்பற்று

வதற்கும், சமயம் சார்ந்த போதனைகளுக்கும், பிரசாரத்திற்கும் நூல்கள் பலவற்றை அடிப் படையாகக் கொள்கிறனர். காமிகாகமம், சூஷ்மாகமம், வீராகமம், பரமேசுவராகமம், வாதுளாகமம் முதலிய நூல்களில் வீரசைவம் பற்றியும் அதன் ஒழுக்க முறைமைகள் பற்றியும் குறிப்புக்கள் உள்ளன. வீரசைவ சமணர்களின் வாய்மொழிப் பாடல்களான வசன இலக்கியங் கள், பன்னிரு திருமுறைகள், திருமங்கலம் சிவப்பிரகாசர் இயற்றியதான பிரபுலிங்க லீலை, சித்தாந்த சிகாமணி, இட்டலிங்க அபிடேக மாலை, நிரஞ்சன விலாசம் உள்ளிட்ட நூல்கள் முதலியன வீரசைவத்தின் மூல நூல்களாக அமைந்து காணப்படுகின்றன.

வீரசைவமரபில் ஏனைய அனுட டான முறைமைகள் வாதுளாகமத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றமை சிறப்பம்சமா கும். இவ் வீரசைவத்தின் மரபுகளை அனுசரித்து வீரசைவ மரபினர் வீராகமம் என்று ஓர் ஒழுங்கு முறையினை வகுத்து அதனை தமிழ்மொழிப் பாடல் நூலாக ஆக்கியும் உரை வகுத்தும் பயன்பாட்டில் ஒழுகிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றின் படி வீராகமம் (தமிழ் நூல்) முக்கிய பிராமணங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

**வீராகமம்**

வீரசைவத்திற்கு வீராகமம் என்பது ஓர் பிராமண நூலாகும். வீரசைவ அடிப்படை கள் பற்றி அறிவதற்கு இந்நூல் பிரதான நூலாக அமைகின்றது. இந்நூலானது இருபத்தெட்டுச் சிவாகமங்களுள் ஒன்றாகிய வடமொழி வீராகமத்தின் மொழி பெயர்ப்பாகக் காணப் படவில்லை. ஆயினும், வீராகமத்தின் பிண்டப்பொருளையும், சிவாகமத்தில் கூறிய வாறு சிவனடியார்கள் ஒழுகிய வீரபக்தியை யும், ஒன்றிணைத்து இந்நூலை ஆக்கியிருப்ப தாகத் தெரியவருகின்றது. இதனைதிருமழிசை சாந்தலிங்க சுவாமிகள் ஆக்கியளித்துள்ளார். இந் நூல் கன்னட மொழியில் இருந்த "வீராகமம்" எனும் தரும நூலை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இலிங்க வழிபாடு அகமும் புறமும் வற்புறுத்தப்பெற்று வளர்ச்சி பெற்றது. இப்புறக் காரணிகளோடு பழைய சித்தாந்த, ஞானயோக முறைகளும் ஏற்கப்பட்டு ஒரு கலவையாக வெளியாகிய தோற்றமே "வீராக மம்" போன்ற அறச்சமய நூல்கள் ஆகும்.[11] இவ்வகை நூல்கள் சமயச் சார்பானவையாயி னும் அவைகள் மனித உயிர்க்கு உறுதுணை விளக்குவனவாகவே எழுந்துள்ளன. வீராகம மும் இவ்வகைச் சிறப்புடையதே ஆகும். மெய்மை நெறி,குருலிங்க பக்தி என்பவற்றை வலியுறுத்தும்,இந்நூல், அதற்கான தனிச் சிறப்புக்களையும் எடுத்து விளக்குகின்றது. இந்நூலானது நூற்றுப் பத்துப் பாடல்களை கொண்டமைந்ததுடன், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தின் தமிழ் ஏட்டுச் சுவடிகளின் படி நூலுருவாக்கம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**வீரசைவத்தின் அடிப்படை நெறிகள்**

எந்தவொரு சமயத்துக்கும் அச்சமயம் சார்ந்த கோட்பாடுகள் யாவும் நெறிமுறைகளா கவும், இலக்கணங்களாகவும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அந்தவகையில் சமூக நலன்களில் கருத்தூன்றிச் செயற்பட்ட வீரசைவமும் இலிங்க தாரணம், சிவதீட்சை, நித்திய சிவபூசை பஞ்சாசாரம் (ஐவகை ஒழுக்கம்), அட்டாவரணம் (எண்வகைக் காப்பு) சடுத் தலம் (அறுவகை இணைப்பு) ஆகியவற்றை அடிப்படை சமய நெறிமுறைகளாகக் கொண்டுள்ளது.

**யாழ்ப்பாணத்து வீரசைவப் பண்பாட்டு மரபில் வீராகமத்தின் செல்வாக்கு**

யாழ்ப்பாணம் தனித்துவமான சமயப் பண்பாட்டுப் பேணலுடைய பிரதேசமாகும். யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுச் சூழலில் வீரசைவம் எனும் சைவப் பிரிவும் சிறப்புற்று விளங்குவது பற்றி இவ்வாய்வில் மேலே சுட்டிக்காட்டப்பெற்றது. சமூகக் குழுமமாக திருக்கோயில்களை மையப்படுத்திய நிலை யில் வீரசைவர்கள் வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்து வீரசைவர்களின் சமயப் பண்பாட்டுப் பேணுகைகள் பஞ்சாசாரிய மரபு, பசவமரபு எனும் வீரசைவ மரபுகளோடு தொடர்புபட்டும், மூலநூல்களை பின்பற்றி யதாகவும் அமைந்து காணப்படுவது குறிப் பிடத்தக்கது.

பஞ்சாசாரியார்களுள் மூலாச்சாரியாரான இரோணுகரின் நாமத்தோடு கீரிமலையில் ஆச்சிரமம் அமைத்து, அதனை மையப்படுத்தியதாகவே யாழ்ப்பாணத்து வீரசைவர்களின் செயற்பாட்டு வேகம் அமைந்திருந்தது. சமயம்சார் செயற்பாடுகளின் மையமாகவும் இரோணுகாச்சிரமம் அமையப்பெற்றது.

கொண்ட கொள்கையில் உறுதிப்பாடும், சீலமும், சிவவேடமுமே வீரசைவவித்தென வீரசைவர்களின் இலக்கணம் பற்றி வீராகமம் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினை,

சத்தியச் சவுசமாகுஞ்
சாந்த நீ றலைவிலாத
சித்தமே ருத்ராக்கஞ்
சின்மயம்யோக வேடம்
நித்தியானந்தங் கந்தை
நிராமயம் கிரீட மென்றுந்
தத்துவம் பதுமையாகச்
சங்கமம் தரிப்பதாமே.[12]

என விளக்கியிருக்கின்றது. வீராகமம் உரைத்த சிவ வேடத்தினை யாழ்ப்பாணத்து வீரசைவர்களின் வாழ்வியலூடாக அறிந்துணரமுடிகின்றது.

யாழ்ப்பாணத்து வீரசைவர்கள் கடைப்பிடித்து வருகின்ற சமய அனுட்டான முறைமைகள், கிரியைகள், ஆசௌசம் (தீட்டு), சிவனடியார்வழிபாடுகள், பக்திநெறி, முதலானவற்றில் வீராகம மரபின் நீட்சியினைக்கண்டுணர முடிகின்றது. தீட்சை என்பது சமயப் பிரவேசமாகும். அச்சமயம் பற்றிய ஞானத் தேடலின் முதற்படிநிலை இதுவாகும். வீரசைவ மரபிற் பிறந்தவர் ஐந்து வயது நிரம்பியவுடன் சிவதீட்சை பெற்று நித்திய கருமத்தை விதிப்படி செய்தல் வேண்டும்.[13] என இச்சமயநெறியில் வலியுறுத்தப்படுகின்றது.

"...மலிபுலன் தீக்கை வேண்டுந்
திதமலி வீராசாரப்
பத்தராஞ் சீலத் தோற்கே"[14]

என்று வீராகமம் செப்பும். யாழ்ப்பாணத்து வீரசைவர்களிடையே சமய தீட்சை பெறும் மரபு நிலவி வருகின்றது.[15] ஐயம்பிள்ளைக் குருக்களிடம் குருப்பட்டாபிசேகம் பெற்றவர்களும்,லிங்காங்க சமராஸ்ய தீட்சை பெற்றவர்களும் பலர் இருக்கின்றனர்.[16]

வீரசைவத்தில் உபநயனச் சடங்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் சில வீரசைவக் குருமார்கள் பூநூல் தரித்திருக்கக் காண்கிறோம். எதுவித வைதீகச் சடங்குகளுக்கும் இடமில்லாத வீரசைவத்தினுள் பூநூல் தரிக்கும் வழக்கம் பிற்காலத்தில் வைதீகக் குருமாரைப் பார்த்து புகுத்தப்பட்டதாக கருதப்படுகின்றது.17 வீராகமத்தில் இதுபற்றிய குறிப்புக்கள் காணப்படவில்ல.

இலிங்க வழிபாட்டு நெறியினரான வீரசைவர்களின் அங்க இலட்சணமாக விளங்குவது இலிங்க தாரணமாகும். இதுவே வீரசைவ சாதனங்களுள் மிகவும் முக்கியமானது. வீரசைவர் தம் குருவினால் முறைப்படி வழங்கப்பட்ட இலிங்கங்களை தலை, கழுத்து, தோள். மார்பு, ஆகிய பகுதிகளில் ஒன்றில் பிரிவற அணிந்திருப்பதும். கரத்திலெடுத்து வைத்து சிவபூசை செய்து வழிபடுவதும் மரபாகும். இலிங்கதாரணம் அவர்களுக்கு பெருஞ்சிறப்பினை அளிப்பதனாலேயே மூல நூல்கள் பலவும் இதனை வற்புறுத்தி நிற்கின்றன.

"இட்டலிங்கத்தை யெண்ணா
தவமதித் திந்தப் பார்மேல்
மட்டறு தீர்ந்த லிங்கம்
வணங்குதல் கதியாம்....."[18]

எனவீராகமம் குறிப்பிடுகின்றது. யாழ்ப்பாணத்தில் இருசாராரும் இலிங்க தாரணம் செய்யப்பெற்றுள்ளனர். பிறந்த உடனே இலிங்க தாரணம் செய்யப் பெறுவது வீரசைவ மரபாகும். ஆயினும் இங்கு குறிப்பிட்ட ஒரு வயதிற்குப் பிறகே இலிங்க தாரணம் செய்கின்ற வழக்கம் உள்ளது. இருப்பினும்சிறுவயது முதல் இலிங்ம் பொறிக்கப் பெற்ற தகடுகளை நூலோடு இணைத்து கழுத்து, கைகளிலே அணிந்திருப்பதனையும் கண்டுகொள்ள முடிகின்றது. சமகாலச் செல்நெறியில் இத்தகைய ஒழுக்க நெறி இளந்தலைமுறையின்ரிடமிருந்து அருகிச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

இலிங்கதாரணம் செய்யப்பெற்ற வீரசைவர்கள் நித்திய சிவபூசை செய்யும் வழக்கமுடையவர்கள். சிவபூசை, இலிங்க வழிபாடு என்பன அனைவருக்கும் பொது வானவையாக விளங்கினும் வீரசைவர்க்கு சிறப்பாக விளங்கி வருகின்றது. இவர்கள் அங்கலிங்க வழிபாட்டினர். ஒரு நாளில் ஒருவேளையாவது சிவபூசை செய்து வருகின் றனர். இட்டலிங்க பூசையின்மூலம் பெறப்படு கின்ற பாதோதகத்தை அருந்தும் பழக்கமுடை யவர்களும் உண்டு.[19] இவற்றை அடியொற்றி வீரசைவர்கள் நித்தியமாகக் கடைப்பிடித் தொழுக வேண்டியவற்றை நூல்களாகத் தொகுத்து பேணிவருகின்றனர். நித்திய கருமவிதி, இட்டலிங்க பூசாத் திரட்டு, இட்ட லிங்க நித்திய பூஜா மஞ்சரி, சத்தியா வந்தன இரகசியம்20 முதலிய நூல்கள் இவ்வகையில் சுட்டத்தக்கன.

இட்டலிங்க பூசை புரிபவர்களான வீரசைவர்கள் பின்பற்றுவதற்குரியதான நெறிமுறைகளாக பஞ்சாரம், அட்டாவரணம், சடுத்தலம் ஆகிய மூன்று நெறிமுறைகள் உள்ளன.

**01. பஞ்சாசாரம் - (ஐவகை ஒழுக்கம்)**

இலிங்க ஆசாரம் - சிவனை இலிங்க உருவில் வழிபடும் ஒழுக்கமுறைமை.

பிருத்திய ஆசாரம் - சிவபெருமானி டத்தும், சிவனடியார்களிடத்தும் அடிமை பூண்டு பணிந்தொழுகும் ஒழுக்கமுறைமை.

சதாசாரம் - உண்மை நெறி நிற்றலாகிய அறநெறி ஒழுக்கம்.

கணாசாரம் - சிவனடியார்களைச் சிவனாகப் பாவிக்கும் ஒழுக்கமுறைமை.

சிவாசாரம் - வீரசைவர்கள் எல்லோரும் சிவ சொருபிகள் என்று வாழும் ஒழுக்க முறைமை.

**02. அட்டாவரணம் -(எண்வகைக்காப்பு)**

குரு - குருவிடத்தில் பக்திகொண்டு ஒழுகுதல்.

சிவலிங்கம் - கடவுளைக் காட்டும் அடையாள மாகிய இட்டலிங்கம்

சங்கமம் - வீரசைவ சீவன் முத்தர்கள் சிவனடி யார்களைவழிபடுதல்.

பாதோதகம் - குருலிங்க சங்கமர்களின் திருவடி கழுவிய பாததீர்த்தம்.

பிரசாதம் - குருலிங்க சங்கமர்களுக்கு அர்ப்பணம் செய்யப்படுபவை.

விபூதி - பசுவின் கோமயத்தை சுத்தஞ் செய்து மந்திர பூர்வமாக உண்டாக்கிய பஷ்மம்.

உருத்திராக்கம் - உருத்திரன் அக்கம்

மந்திரம் பிரணவத்துடன் கூடிய நமச்சிவாய என்ற ஆறெழுத்து மந்திரம்.

**03. சடுத்தலம் - (அறுவகை இணைப்பு)**

வீரசைவர்கள் ஆன்மாவை சிவத்து டன் ஐக்கியமாதலையே குறிக்கோளாகக் கொள்வர். இதற்கு ஆறு மனோதத்துவ நிலைகளை படிமுறையில் கடைப்பிடித் தொழுக வேண்டும். அவையேசடுத்தலங் களாகும்.

பக்தித் தலம் - பக்தி என்ற தூய்மையான ஒன்றினுள் மூழ்கித் தன்னை தூய பக்தியால் நிறைவு செய்து கொள்ளு தல்

மாகேசுரத் தலம் - விரதங்கள், நியமங்கள் என்பவற்றைக் கடைப்பிடித் தொழுகுதல்.

பிரசாதித்தலம் - திருவருள் கூடுதல்.

பிராணலிங்கத் தலம் - ஆத்மனும் இறைவனும் வேறல்ல என்ற நிலையில் தன்னை உள்நோக்கி உணர்ந்து இலிங்கத்தை அனுபவ பக்தியால் துய்க்கும் நிலை.

சரணத்தலம் - ஆத்மன் இறைவனுடன் கலந்து ஆனந்த பக்தியெய்தும் நிலை.

ஐக்கியத் தலம் - சீவன் சிவனுடன் வேறின்றி ஒன்றுபடும் நிலை.

ஆகியன வீரசைவ சமயத்தின் அடிப்படை நெறிமுறைகளாகும்.

வீரசைவத்தின் அடிப்படை நெறி முறைகள் யாவும் வீராகமத்தில் கூறப்பட் டுள்ளன. மெய்மை நெறி, குருலிங்க சங்கம

பக்தி, திருநீற்றின் பெருமை, சிவனடியார்களின் சிறப்பு,ஆறெழுத்து (ஓம் சிவாயநம) மந்திரம் போன்ற பல இன்னோரன்ன விடயங்களைக் வீரசைவத்தினர்க்கு எடுத்துவிளக்குவதாக வீராகமத்தின் பொருள் மரபு அமையப்பெற்றிருக்கின்றது. 70 - 81 வரையான செய்யுட்களில் பெரிய புராணத்திலும், பசவ புராணத்திலும் போற்றப்படும் சிவனடியார்களின்திவ்விய சரிதங்கள் விளக்கப்பட்டுள்ளன. வீரசைவர்கள் பெரிய புராணம் கூறுகின்ற நாயன்மார்களை புராதனர் என்ற சிறப்புடன் போற்றி வழிபடும் மரபினராக இருந்து வருகின்றனர். கீரிமலையிலுள்ள இரேணுகர் ஆச்சிரமத்திலே சேக்கிழார், திருமூலம், தேவார முதலிகள், பசவர், இரேணுகர். சிறுத்தொண்டர் முதலிய நாயன்மார்களின் குருபூசைகள் சிறப்பாக இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.[22]

வீராகமத்தில் ஆலய வழிபாடுகளைப் பற்றிய கருத்துக்கள் காணப்படவில்லை. ஏனெனில் வீரசைவம்ஆலய வழிபாட்டை எதிர்த்தே வந்திருக்கின்றதென்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். அவர்கள் நடமாடுங் கோயிலின் நயமுரைப்பவர்களாகவே விளங்கி வந்தனர். இதனையேவீராகமம்,

"அருஞ்சிலை யதனாற்
தேவறாக்கிஆலயமுமந்த
விருஞ்சிலை யதனாற் செய்
யிரிரண்டு மொன்றென்னலாமோ
தருந்தவ வேடம் பூண்டு
தமருடனிருந்தோர் தம்மை
வருங்குல மதிலொன்றாக
மதிப்பவரலகை ஒப்பார்."

என்று குறிப்பிடுகின்றது. ஆகவே கருங்கல்லால் சிலைபடைத்து, கோயில் எடுத்து வழிபடுதல் ஆகிய இரண்டு சூழலும் செம்மையானவைதானா? ஆதலால் உருவ வணக்கத்தைக் காட்டிலும் சிவனடியார் வணக்கம் சிறந்ததே என்பது பெறப்படும்.

திருமூலரும்,

"படமாடக் கோயில்
பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில்
நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில்
நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில்
பகவர்ற்கு அது ஆமே"23

என்று கூறிநிற்பது காணத்தக்கதாகும்.

ஆனாலும் யாழ்ப்பாணத்து வீரசைவர்களின் சமயப் பண்பாட்டுப்பேணல்கள் திருக்கோயில்களை மையப்படுத்தியதாகவே இருந்து வருகின்றது.

கிராமியக் கோயில்களில் ஆற்றும்பணி

வேதாகம முறைப்படி நடக்கின்ற கோயிலில் ஆற்றும் பணி

என இவர்களது சமயப்பணி அமைந்து காணப்படுகின்றது. அத்துடன், சோடனை, சம்பரம், காவடி ஆகியவற்றை அமைத்தல்,உடுக்குப்பாட்டு, காவடி, கரகம், கூத்து, பண்ணிசை, இசைச்சொற்பொழிவு போன்ற கிராமியக் கலைகளை வளர்த்தல் என்ற தொண்டுகளையும் திருக்கோயில்களை மையமாகக் கொண்டு ஆற்றி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வகையில் வீராகமம் பொருள் மரபாகக் கொள்கின்ற வீரசைவ அடிப்படை நெறிமுறைகள் யாழ்ப்பாணத்து வீரசைவ சமயப்பண்பாட்டு மரபில் ஏற்படுத்திய செல்வாக்கினையும் தாக்கத்தினையும் பின்வரும் செயற்பாடுகளில் கண்டுகொள்ள முடிகின்றது.

1. சிவதீட்சை பெற்றுக் கொள்ளும் வழக்கமுடையவர்களாயிருத்தல்.
2. இலிங்க தாரணம் செய்து கொள்ளும் வழக்கமுடையவர்களாக இருத்தல்.
3. நித்தியமாக சிவபூசை செய்து வருபவர்களாக இருத்தல்.
4. சிவதீட்சை,இலிங்க தாரணம், நித்திய சிவபூசை மற்றும் கிரியை நெறிகளின் போது "ஓம் சிவாய நம" என்ற ஆறெழுத்து மந்திரத்திற்கு முதன்மை கொடுத்தல்.
5. சங்கம வழிபாட்டை கடைப்பிடித்தொழுகுதல்.

6. குருவிடத்தில் பக்தி கொண்டொழுகுந் தன்மை உடையவராயிருத்தல்.

7. பக்தி என்னும் தூய்மையான ஒன்றினுள் மூழ்கித் தம்மை தூய பக்தியால் நிறைவு செய்து கொள்ளுதல்.

8. விரதங்கள், நியமங்கள் என்பவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுதல்.

9. நித்திய கருமங்களை இலக்கிய வடிவில் விதிகளாக உருவாக்கி பேணி வருதல்.

10. இட்டலிங்க பாதோதகம் செய்து கொள்ளும் வழக்கம் நிலவுதல்.

11. விபூதி, உருத்திராக்கம், அணியும் வழக்கத்தைக் கொண்டிருத்தல்.

12. தாம்பூலம் கொடுத்து வரவேற்கும் பண்பாட்டினைக் கொண்டிருத்தல்.

13. அங்கலிங்கத்தின் பெருமை உணரும் மாண்பினராகவிளங்கி வருகின்றனர்.

14. அங்கலிங்கத்தாரெல்லோரும் அரன் (சிவன்) திருவுரு என்ற சிந்தனை உடையவராயிருந்து வருதல்.

15. சிவத் தொண்டர்களாக இருந்து சிவப்பணி புரிந்து வருகின்றனர்.

**நிறைவுரை**

சமூக நலத்தில் கருத்தூன்றி வளர்ச்சி கண்ட சமயங்கள் பலவற்றிலும் வீரசைவம் முதன்மை பெறுகின்றது. இச்சமயம் கால வளர்ச்சிப் படிநிலைகளில் பல்வேறு விதமான வளர்சிந்தனைப் படியாகப் புதுப்புதுக் கருத்துக்களை மக்கள் நலத்தினைக் கருத்தில் கொண்டு வழங்கி வந்துள்ளது. மனித உயிரின் மேம்பாட்டினை இறைவனோடு தொடர்பு படுத்திப் பார்த்து எடுத்துரைத்து நல்வழிப் படுத்தும் நோக்கில் பல நூல்களைப் படைத்துள்ளது. அந்நூல்கள் பலவும் இச்சமய வளர்ச்சிப் படிநிலைகளில் மூல நூல்களாகவே பயன்பட்டு வருகின்றன. இவ்வகை நூல்களில் ஒன்றாகவே "வீராகமம்" என்னும் தமிழ் நூலும் போற்றப்பட்டு வருகின்றது. இவ்வகையில் யாழ்ப்பாணத்து வீரசைவசமயப் பண்பாட்டு வளர்ச்சி நிலையில் வீராகமத்தின் செல்வாக்கினையும் தாக்கத்தினையும் உணர முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. திருமந்திரம் பாடல். 1512
2. இவர் பசவண்ணர், பசவேசர், வசவேசர், பசவர், வசவர், பசவையா, இரண்டாம் சம்பு எனவும் குறிப்பிடப்படுகின்றார்.
3. இரேவணாத்தியர், மருளராத்தியர், பண்டித ஆராத்யர், ஏகோராம ராத்தியார், விஸ்வ ஆராத்யர் ஆகியோர் பஞ்ச ஆசாரியார்களாவர்.
4. திருமலைமுத்துச் சுவாமி. அ, (1961), சைவநன்னெறி, மதுரை மீனாட்சி புத்தக நிலையம், பக். 179 - 180.
5 இரத்தினசபாபதி. வை. பேராசிரியர், (1990), வீரசைவம், இரண்டாம் பதிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம். பக். 1 - 3.
6. பத்மநாதன் சி. பேராசிரியர், (2000), இலங்கையில் இந்து கலாசாரம், பகுதி 1, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பக். 175 - 176.
7. மேலது - பக். 175 - 177
8. மேலது - ப. 179.
9. சிற்றம்பலம். சி. க. பேராசிரியர். (1992), யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு. பக். 240 - 243.
10. மேலது - ப. 241.
11. தெய்வநாயகம். சி. கோ. (பதி. ஆ), (1985), வீராகமம், தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர். ப.ஏ.
12. வீராகமம். பாடல் - 30
13. ஐயம்பிள்ளைக் குருக்கள். சிவ., (1935), நித்திய கரும விதி, இரேணுகாச்சிரமம், கீரிமலை. ப -2.
14. வீராகமம். பாடல் - 34
15. நேர்காணல். கி., உருத்திர புரீஸ்வரக் குருக்கள், 2010. மாசி. 28.
16. நேர்காணல் - அரிகரன் ஐயா. 2010. பங்குனி. 07.

17. நவரத்தினம்.க.,(1950), வீரசைவம் அல்லது இலிங்காயதம், யாழ்ப்பாண இலிங்காயத சமூகம். ப - 14.

18. வீராகமம். பாடல் - 25.

19. சிவ ஐயம்பிள்ளைக் குருக்களின் வாழ்வியலூடாக இதனை அறிக.

20. வீரசைவக் குருவான சிவ.ஐயம்பிள்ளைக் குருக்களவர்களால் ஆக்கப்பட்டு இரேணுகாச்சிரம வெளியீடுகளாக வெளியிடப்பட்ட நூல்கள்.

21. நேர்காணல்.கி., உருத்திரபுரீஸ்வரக் குருக்கள், அளவெட்டி, 2010.02.28.

22. வீராகமம். பாடல் - 46.

23. திருமந்திரம் - பாடல் - 1847.


**உசாத்துணை நூல்கள்**


இரத்தினசபாபதி.வை.ஞச. (1990), வீரசைவம், இரண்டாம் பதிப்பு, சென்னைப்பல்கலைக்கழகம்.

இராசமாணிக்கம்,வேலா.,(1978), வீரசைவநெறியும் அதன் வரலாறும், சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம்.

ஐயம்பிள்ளை சிவாச்சாரியார்.சி.வ., (1969), இஷ்டலிங்க பூசாத்திரட்டு, இரேணுகாச்சிரமம், கீரிமலை.

......(1935), நித்திய கரும விதி, இரேணுக ஆச்சிரமம், கீரிமலை.

சண்முக சுந்தரம்.த.(1983), யாழ்ப்பாணத்து வீரசைவர், அருள் வெளியீட்டகம், மாவைக் கந்தசுவாமி கோயிலடி, தெல்லிப்பளை, இலங்கை.

சிற்றம்பலம் சி.க.,(1992), யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

பத்மநாதன்.சி.பேராசிரியர்., (2000), இலங்கையில் இந்து கலாசாரம், பகுதி 1, இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்களம்.

நாகி.செட்டியார்.செ. (1937), வீராகமம், குருபசவா அண்ட் கம்பனி லிமிடெட், சென்னை

தகரே.க.வா., (1990), சைவ தத்துவம், அல்லயன்ஸ் கம்பனி, மயிலாப்பூர், சென்னை.

சிவஸ்ரீ.ஐயம்பிள்ளைக் குருக்கள் வைரவிழா மலர்,(1977),காங்கேசன்துறை.

பண்பாடு, பருவ இதழ் - 32, (2007 மார்கழி),இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், காலி வீதி, கொழும்பு - 04.

Dasgupta.S., (1975) History of Indian philosophy, Vol-V, motilal Banarsidas, Delhi.

Nandimath.S.C., (1942), A Hand Book of Virasaivism, Motilal Banarsidas, Delhi.